1 ஆண்டு ஆட்சி
ஓயா உழைப்பின் ஓராண்டு

வாய்மையே வெல்லும்

காலப்பேழை


# கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி...



காலைப் பேழை

1 ஆண்டு ஆட்சி
ஓயா உழைப்பின் ஓராண்டு

# கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி...




நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம்...

ஓயா உழைப்பின் ஓராண்டு

கடைக்கோடித்
தமிழரின்
கனவுகளைத்
தாங்கி...


நிறைவான
வளர்ச்சியில்
நிலையான
பயணம்...



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்...

**த**மிழ்நாடு சட்டமன்றத்திற்கு **06.04.2021** அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலானக் கூட்டணி **159** இடங்களில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக **07.05.2021** அன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

சென்னை, கிண்டி, ஆளுநர் மாளிகையில் எளிமையாக நடைபெற்ற பதவியேற்பு விழாவில் மாண்புமிகு ஆளுநர் திரு.**பன்வாரிலால் புரோகித்** அவர்கள் பதவியேற்பு உறுதிமொழியும் ரகசியகாப்புப் பிரமாணமும் செய்து வைக்க, திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றுக்கொண்டார்.



# அனைத்து மகளிருக்கும் இலவசப் பயணம்



மகளிர் நலன் கருதி, பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் அரசு போக்குவரத்துக் கழக சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.05.2021 அன்று, முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் அறிவித்தார்.

இச்சேவை மூலம் மகளிர் 105.51 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

# ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு




**த**மிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் **07.05.2021** அன்று, தலைமைச் செயலகத்திற்கு வருகை தந்த திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **5** முக்கிய அரசாணைகளில் கையெழுத்திட்டார்.

தேர்தல் அறிக்கையில் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் **16.05.2021** முதல் குறைத்து விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

- **6** இலட்சம் புதிய நுகர்வோர்கள்.
- ரூ.**1,643** இலட்சம் சேமிப்பின் மூலம் **1** கோடி நுகர்வோர் பயன்.



# முதல்வரின் முகவரி



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது 100 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற ஒரு புதிய துறை உருவாக்கம்.

2 இட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்குத் தீர்வு.

அனைத்துச் சேவைகளும் பொதுமக்களுக்குத் தொடர முதலமைச்சரின் “முதலமைச்சரின் தனிப்பிரிவு”, “முதலமைச்சரின் உதவி மையம்”, “ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை” அமைப்பு மற்றும் “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு “முதல்வரின் முகவரி” என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுச் செயலாக்கம்.

22 இலட்சத்து 24 ஆயிரத்து 833 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 20 இலட்சத்து 47 ஆயிரத்து 996 மனுக்களுக்குத் தீர்வு.

# ஊடகத்துறையினர் முன்களப் பணியாளர்கள்...

பேரிடர் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுக் காலங்களில் தங்களது இன்னுயிரைப் பணயம் வைத்து, செய்தியாளர்கள், காட்சி–ஒலி ஊடகங்களில் பணியாற்றி வருகின்ற ஊடகத்துறையினர் அனைவருமே தமிழகத்தில் முன்களப்பணியாளர்களாகக் கருதப்படுவர் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்தார்.

அனைத்து மாவட்டங்களிலும், அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் சிறப்பு ஊக்கத்தொகை.

கொரோனா நோய்த் தொற்றால் இறக்க நேரிட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 இலட்சம் இழப்பீட்டுத் தொகை.





# குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவி



**கொ**ரோனா பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர் களுக்குத் தலா ரூ.4,000 மற்றும் 14 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கியத் தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், முதல் தவணை ரூ.2,000 வழங்கும் பணியினை 10.05.2021 அன்றும், இரண்டாம் தவணையாக ரூ.2,000 மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள்அடங்கியத் தொகுப்பு வழங்கும் பணியினை 03.06.2021 அன்றும் தொடங்கி வைத்தார்.

ரூ.8,392.76 கோடி செலவில் கொரோனா நிவாரண நிதி உதவி.


ரூ.844.51 கோடி செலவில் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கியத் தொகுப்பு.

2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பயன்.



# மருத்துவ பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை





**கொ**ரோனா சிகிச்சைப் பணியில், முன்களப் பணியாளர்களாக அல்லும் பகலும் அரசு மருத்துவமனைகளில் அயராது பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதரப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டும் வகையில், அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.05.2021 அன்று அறிவித்தார்.


கொரோனா தொற்றின் இரண்டாம் அலைக் காலமான ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாத காலத்திற்கு மருத்துவர்களுக்குத் தலா ரூ.30 ஆயிரம் ஊக்கத்தொகை.

செவிலியர்களுக்குத் தலா ரூ.20 ஆயிரம் ஊக்கத்தொகை.

இதரப் பணியாளர்களுக்குத் தலா ரூ. 15 ஆயிரம் ஊக்கத்தொகை.

பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்குத் தலா ரூ. 20 ஆயிரம் ஊக்கத்தொகை.





# கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ரா. அவர்களுக்கு திருவுருவச்சிலை

தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்த கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ராஜநாராயணன் (கி.ரா.) அவர்களின் நினைவினைப்போற்றி படைப்பாளுமையை வெளிப்படுத்திடவும் புகைப்படங்கள், படைப்புகளை எதிர்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையிலும் அரங்கம் மற்றும் திருவுருவச்சிலை அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.05.2021 அன்று அறிவித்தார்.

மேலும், மறைந்த எழுத்தாளர் கி.ரா. அவர்கள் படித்த இடைச்செவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

## ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள்

# பணி நியமனம்

**2018**ஆம் ஆண்டு நடந்த தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின்போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்த 17 நபர்களுக்குக் கிராம உதவியாளராகவும், சமையலராகவும் வழங்கப்பட்ட பணி நியமனங்களை மாறுதல் செய்து கல்வித் தகுதியின் அடிப்படையில் 16 நபர்களுக்கு இளநிலை உதவியாளராகவும், ஒரு நபருக்கு ஈப்பு ஓட்டுநராகவும் பணி நிமயன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2021 அன்று மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.



# மீன்பிடித் தடைக்கால நிவாரணம் உயர்வு

**க**டல் மீன் வளத்தைப் பேணிக்காத்திட, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15ஆம் நாளன்று தொடங்கி ஜூன் 14ஆம் நாள் வரையிலும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஜூன் 1ஆம் நாளன்று தொடங்கி ஜூலை 31ஆம் நாள் வரையிலும் 61 நாட்களுக்கு மீன்பிடித் தடை செயல்படுத்தப்படும் காலத்தில், மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் 2008ஆம் ஆண்டு முதல் மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டிற்கான மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையாகத் தலா ரூ.6,000 வீதம் உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவிட்டார்.

12 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1,54,009 மீனவ குடும்பங்களுக்கு ரூ.92.40 கோடி நிவாரணம்.





# கொரோனாவால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு நிவாரணம்




**கொ**ரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்திடும் வகையில், நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.05.2021 அன்று அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்.

- பெற்றோரை இழந்த 338 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு,
- தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் 10,486 தந்தை அல்லது தாய்க்குத் தலா ரூ.3 இலட்சம்.
- உறவினர், பாதுகாவலரின் ஆதரவில் வளரும் 308 குழந்தைகளின் பராமரிப்புச் செலவினமாக மாதந்தோறும் தலா ரூ.3,000 உதவித்தொகை.



இந்தியாவிலேயே முதன்முறையாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று முழு பாதுகாப்புக் கவச உடை அணிந்து, கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்றால் சிகிச்சைப் பெற்று வருபவர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரில் ஆறுதல்



# ஓய்வுபெற்ற அரசுப் போக்குவரத்துக்கழக பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பணப்பயன் நிலுவைத் தொகை


தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரையிலான காலக்கட்டங்களில் ஓய்வு பெற்ற போக்குவரத்துக்கழகப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணப் பயன்களின் நிலுவைத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க. ஸ்டாலின்** அவர்கள் 02.06.2021 அன்று, சென்னையில் வழங்கினார்.

2,457 ஓய்வுபெற்ற போக்குவரத்துக்கழகப் பணியாளர்களுக்கு ரூ.497.32 கோடி.





# மதுரையில் கலைஞர் நினைவு நூலகம்



புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதன் மீதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இருந்த தீராப் பற்றினை எடுத்துரைக்கும் வகையில், சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று அறிவித்தார்.

மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை வளாகத்தில் 2.70 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நினைவு நூலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.01.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,13,288 சதுர அடி பரப்பளவில் அடித்தளத்துடன் கூடிய 8 தளங்கள்.



# இலக்கிய மாமணி விருது

**த**மிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில் பல்வேறு படைப்புகளைப் படைத்தும், பன்முகநோக்கில் தொண்டாற்றி வரும் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் **"இலக்கிய மாமணி விருது"** வழங்கப்படுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளையொட்டி அறிவித்தார்.

விருதாளர்களுக்கு ரூ. 5 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் தங்கப்பதக்கம்.


## தமிழ்நாடு அரசு

பல்வேறு படைப்புகளைப் படைத்தும், பன்முகநோக்கில் தொண்டாற்றிவரும் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் "இலக்கிய மாமணி விருது"






ரூ.5 இலட்சம்





# கனவு இல்லம்



**த**மிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீட விருது, சாகித்திய அகாடமி விருது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளையின் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் மற்றும் தமிழ் இலக்கியத்திற்கான நோபல் பரிசு போன்ற விருதுகளைப் பெற்றவர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் இல்லம் வழங்கும் தமிழ்நாடு அரசின் கனவு இல்லம் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், **03.06.2021** அன்று அறிவித்தார்.

ஆண்டுதோறும் **10** தமிழ் எழுத்தாளர்களுக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் இல்லம் வழங்கப்படும்.



# திருவாரூரில்
# நெல் சேமிப்புக் கிடங்குகள்

திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, ரூ.30 கோடி செலவில் நெல் சேமிப்புக் கிடங்குகள் – உலர் களங்கள் அமைக்கப்படுமென அறிவித்து ரூ. 14 கோடி மதிப்பீட்டில், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பூந்தோட்டம், மன்னார்குடி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 9,500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்ட 5 சேமிப்புக் கிடங்குகளை மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.01.2022 அன்று திறந்து வைத்தார்.

ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் 6,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 சேமிப்புக் கிடங்குகள், 50 உலர்களங்கள், 2–தொடர் ஓட்ட உலர்விப்பான்கள், 2– மறுசுழற்சித் தொகுப்பு உலர்விப்பான்கள்.

ரூ.9.40 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியுடன் கூடிய துணை விற்பனைக்கூட கட்டடங்கள்.

திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன் பேணும் வகையில், அரசுப் போக்குவரத்துக் கழக சாதாரண நகரப் பேருந்துகளில், இலவசப் பயணத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **03.06.2021** அன்று அறிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் **4.96** கோடி பயண நடைகளும், அவர்களின் துணையாளர்கள் **79.54** இலட்சம் பயண நடைகளும், திருநங்கையர்கள் **6.13** இலட்சம் பயண நடைகளும் மேற்கொண்டுள்ளனர்.



# திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை

# முன்களப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மீண்ட முன்களப் பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# காவல்துறையினருக்கு கொரோனா ஊக்கத்தொகை



தமிழ்நாட்டில் கொரோனா தொற்றின் முதல் மற்றும் இரண்டாம் அலையின்போது தங்களது இன்னுயிரையும் பொருட்படுத்தாது கடமையாற்றிவரும் காவல்துறையினரின் இன்றியமையாத பணியினை அங்கீகரித்து ஊக்குவிக்கும் விதமாகத் தலா ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவிட்டார்.

கொரோனா தொற்றுக் காலத்தில் களப்பணியாற்றிவரும் இரண்டாம் நிலைக் காவலர் முதல் ஆய்வாளர்கள் வரையிலான 1 இலட்சத்து 17 ஆயிரத்து 184 காவல்துறையினருக்குத் தலா ரூபாய் 5 ஆயிரம் ஊக்கத்தொகை.

கொரோனா தொற்றுக் காரணமாக இன்னுயிரை இழந்த 84 காவல்துறை அலுவலர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் நிதியுதவி.

# திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவித்தொகை

**கொ**ரோனா நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக ஊரடங்கு காலத்தில் திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றிப் பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள், இதரப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலா ரூ.4,000 உதவித்தொகை, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் அடங்கியத் தொகுப்பு வழங்கும் திட்டத்தை அறிவித்து 03.06.2021 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

11,065 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் உட்பட திருக்கோயில் பணியாளர்கள் பயன்.





# நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி உயர்வு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாகப் பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **08.06.2021** அன்று, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கிவைத்தார்.

- **1,000** நலிவுற்ற கலைஞர்கள் பயன்.

  நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதியுதவி ரூ.**3,000**ஆக உயர்வு.

- **6,600** அகவை முதிர்ந்த செவ்வியல் மற்றும் கிராமியக் கலைஞர்கள் பயன்.






# குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம்

டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை நெல் சாகுபடியில் உயர் மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கில் முக்கிய இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு ரூ.61.09 கோடி மானியத்தில் வழங்கும் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.06.2021 அன்று அறிவித்தார்.

- மேட்டூர் அணை 12.06.2021 அன்று, குறித்த நாளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விவசாயத்திற்குத் திறப்பு.
- குறுவைப் பருவத்தில் 3.5 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய இலக்கு. 4.9 இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிட்டுச் சாதனை.
- டெல்டா விவசாயிகளுக்குச் சான்று நெல் விதைகள், இரசாயன உரங்கள், பசுந்தாள் உர விதைகள் போன்ற இடுபொருட்கள் மானிய விலையில் வழங்குவதற்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு.
- பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.11.09 கோடி நிதி.
- 2,87,401 விவசாயிகள் பயன்.
- டெல்டா மாவட்டங்களில் ரூ.65.11 கோடி மதிப்பீட்டில் 4,061.44 கி.மீ. தூரத்திற்கு 647 தூர்வாரும் பணிகள்.





# பெண் காவலர்களுக்கு இலகுவானப் பணி

தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரியும் பெண் காவலர்களின் நலன் கருதி, முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணியிலிருந்து பெண் காவலர்களுக்கு விலக்கு அளிக்கவும், அவர்களுக்கு இலகுவானப் பணிகளை வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.06.2021 அன்று உத்தரவிட்டார்.

வீட்டிலிருந்தபடியே கல்வி பயில

# கல்வித் தொலைக்காட்சி







கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பள்ளி செல்ல இயலாமல் இருக்கும் மாணவர்கள், வீட்டிலிருந்தபடியே கல்வி பயில ஏதுவாக 1 முதல் 12 வரை அனைத்து வகுப்புகளுக்கும் உரிய அனைத்து பாடங்களுக்குமான கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.06.2021 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

292 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 69 இலட்சம் மாணாக்கர் பயன்.

**த**மிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், சிறு தொழில்கள், தினக்கூலிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பல்வேறு பகுதிகளில் முகாமிற்கு வெளியேயும் வசித்து வருகின்றார்கள். கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வாழ்வாதாரம் பாதிப்படைந்த அவர்களின் நலனைக் காத்திட சிறப்பு நேர்வாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்குத் தலா ரூ.4,000 கொரோனா நிவாரண நிதி வழங்கப்படுமென அறிவித்து, 19.06.2021 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

முகாமிற்கு வெளியே வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்குத் தலா ரூ.4,000 வீதம் என மொத்தம் 5 கோடியே 42 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## முகாமிற்கு வெளியே வாழும்
# இலங்கைத் தமிழர்களுக்கும் கொரோனா நிவாரண நிதி



# மின்னகம்



**பொ**துமக்கள் மின்துறை சார்ந்த தகவல்களைப் பெறவும், குறைகளைத் தெரிவித்துத் தீர்வு காணவும் **“மின்னகம்”** என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க. ஸ்டாலின்** அவர்கள் **20.06.2021** அன்று, சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார்.

- தொடர்புக்கான தனி கைபேசி எண்.**9498794987**
- **24** மணிநேரமும் தொடர்புகொள்ளும் வசதி.
- புகார்கள் கணினி மூலம் பதிவு – உடனடி நடவடிக்கை.
- புகார்தாரரின் கைபேசி எண்ணுக்குப் பதிவு எண், தீர்வு விவரம் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும்.



## அண்ணா நூற்றாண்டு நூலகம்


# புதுப்பொலிவுடன் புனரமைப்பு





பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக ரூ.170 கோடி மதிப்பீட்டில் 8 மாடிகள் கொண்ட அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது.

பராமரிப்பின்றி உள்ள நூலகம் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்படும் என மாண்புமிகு ஆளுநர் உரையில் 21.06.2021 அன்று, சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு மறுசீரமைக்கும் பணிகள் ரூ.32.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.



# சிங்காரச் சென்னை 2.0

சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபோது, சென்னை மாநகரத்தைச் 'சிங்காரச் சென்னையாக' மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தற்போது, சென்னை மாநகரக் கட்டமைப்பை நவீனச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திடும் வகையில், 'சிங்காரச் சென்னை 2.0' எனும் புதிய திட்டத்தினைச் செயல்படுத்த உத்தரவிட்டார்.

'சிங்காரச் சென்னை 2.0' திட்டத்திற்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு.











# சென்னை மெட்ரோ இரயில்

சென்னைப் பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட அதிநவீன வசதியை உருவாக்கும் வகையில் 2007ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் அவர்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 2009ஆம் ஆண்டு துணை முதலமைச்சராக இருந்த போது முதற்கட்டப் பணிகள்.

இரண்டாவது திட்டத்தின்கீழ், தற்போது மாதவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரை.

கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை.

மாதவரம் முதல் சோழிங்க நல்லூர் வரை 3 வழித்தடங்கள் 113.8 கி.மீ. நீளத்திற்குக் கட்டுமானப் பணிகள்.



# பொருளாதார ஆலோசனைக் குழு




தமிழ்நாட்டின் வளர்ச்சி இலக்கிற்கானப் பாதையை வகுத்து வழங்கிட, முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு உருவாக்கப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் 21.06.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

**குழு உறுப்பினர்கள்:**

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன்,

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ,

ஒன்றிய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் டாக்டர். அரவிந்த் சுப்ரமணியன்,

பொருளாதார நிபுணர் பேராசிரியர் ஜான் ட்ரீஸ்,

முன்னாள் ஒன்றிய நிதிச் செயலாளர் டாக்டர். எஸ். நாராயண்.






# திருக்கோயில் குடமுழுக்கு

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 100 திருக்கோயில்களில் ஒரே ஆண்டில் திருப்பணி மற்றும் குடமுழுக்குச் செய்யப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இதுவரை 81 திருக்கோயில்களில் திருக்குட முழுக்கு.








# வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை

**வே**ளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், ஆண்டுதோறும் **வேளாண்மைக்கென்று தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை** தாக்கல் செய்யப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், 24.06.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்துச் செயலாக்கம்.

- நம் நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகளின் முக்கியத்துவத்தைப் போற்றும் வகையில், வேளாண்மைத் துறை **‘வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை’** எனப் பெயர் மாற்றம்.
- புதிய தொழில்நுட்பங்களுடன் வேளாண்மை நவீனமயமாக்கலுக்கு முக்கியத்துவம்.
- விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதற்காக, வேளாண் தொடர்புடைய செயல்பாடுகள் ஊக்குவிப்பு.




**சா**தி, மத தீண்டாமையில் மூழ்கிக்கிடக்கும் சமுதாயத்தை மறுமலர்ச்சி அடையச் செய்யும் வகையில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரில் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1997ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டம் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் கட்டப்படும் 100 வீடுகளில் 40 வீடுகள் ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 25 வீடுகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 10 வீடுகள் இதர வகுப்பினருக்கும் ஒதுக்கீடு.

தமிழ்நாடு முழுவதும் 238 சமத்துவபுரங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்தார்.

உயர்ந்த நோக்கத்துடன் அமைக்கப்பட்ட சமத்துவபுரங்கள் புதுப்பொலிவுடன் சீரமைக்கப்படும் என்று 24.06.2021 அன்று, சட்டமன்றப்பேரவையில் அறிவித்து, விழுப்புரம் மாவட்டம், கொழுவாரியில் ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.04.2022 அன்று திறந்து வைத்தார்.

# புதுப்பொலிவுடன் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்

# புத்துயிரூட்டப்படும் உழவர் சந்தைகள்

விவசாயிகளும், நுகர்வோர்களும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைக்குப் புத்துயிர் அளிக்கப்படுவதோடு, மாநிலம் முழுவதும் மீண்டும் உழவர் சந்தைகள் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 24.06.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

அதனடிப்படையில்,

- ரூ.12.5 கோடி ஒதுக்கீட்டில் உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்.
- 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உரம் தயாரிக்கும் அலகுகள்.
- ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் 10 புதிய உழவர் சந்தைகள்.
- மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகள்.





# புலம்பெயர்ந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப்பொருட்கள் தொகுப்புத் திட்டம்



**கொ**ரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் பணிவாய்ப்பை இழந்த, குடும்ப அட்டை இல்லாத, புலம்பெயர்ந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் பசியால் வாடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு, அவர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் ஆகிய உணவுப்பொருட்கள் அடங்கியத் தொகுப்பு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்து, 25.06.2021 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

ரூ.6.66 கோடி மதிப்பீட்டில் 1,29,444 புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் அடங்கியத் தொகுப்பு.

தமிழ் மொழி, பண்பாடு போன்றவற்றை உலக அளவில் பரவிட துணை நிற்கும் வகையில், கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தொடர்ந்து தொய்வின்றி இயங்கிட தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1 கோடியே 25 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.07.2021 அன்று அறிவித்தார்.

- தமிழ் மொழியின் வளர்ச்சியில் ஜெர்மனியில் 1963ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்ப் பிரிவுக்கு முக்கியப் பங்கு.
- முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் அரசு, கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இரண்டு ஆண்டுகளில், 60 ஆண்டுகளைக் காணும் நல்வாய்ப்புக்கு உதவிடும் வகையில் தொடர்ந்து செயல்பட ரூ.1.25 கோடி ஒதுக்கீடு.

# கொலோன் பல்கலைக்கழக தமிழ்துறை தொய்வின்றி இயங்க நிதியுதவி





# முதலீட்டாளர்களின் முதல் முகவரி

**த**மிழ்நாட்டை தொழில் வளத்தில் முதல் மாநிலமாக உருவாக்கிட **"முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு"** என்ற முதலீட்டாளர் மாநாடு சென்னையில் 20.07.2021 அன்றும், கோயம்புத்தூரில் 23.11.2021 அன்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**சென்னை மாநாட்டில்** ரூ.28,508 கோடி முதலீட்டில் 49 திட்டங்கள் வாயிலாக 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்.

❖ தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 துவக்கம்.

**கோயம்புத்தூர் மாநாட்டில்** ரூ.52,549 கோடி முதலீட்டில் 82 திட்டங்கள் வாயிலாக 92,420 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்.

❖ வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறைக்கான கையேடு வெளியீடு.

❖ தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021 வெளியீடு.


❖ ஒற்றைச் சாளர இணையம் 2.0 கைபேசி செயலி துவக்கம்.


**தூத்துக்குடி மாநாட்டில்** ரூ.4,755 கோடி முதலீட்டில் 33 திட்டங்கள் வாயிலாக 17,476 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்.

❖ சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூற்றாண்டு விழாவில்

# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் திறப்பு






ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்த, பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட நூற்றாண்டு விழா காணும் சென்னை ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தனது ஜனநாயகக் கடமையைச் செம்மையாக நிறைவேற்றிய **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்களை நினைவுகூர்ந்து, அன்னாரது திருவுருவப்படத்தினை மாண்புமிகு குடியரசுத் தலைவர் **திரு.ராம்நாத் கோவிந்த்** அவர்கள் 02.08.2021 அன்று திறந்து வைத்தார்.



# அன்னைத் தமிழில் அர்ச்சனை




**"எ**ங்கும் தமிழ், எதிலும் தமிழ்" எனும் கொள்கையில் திளைத்த தமிழ் அறிந்த பெருமக்கள் மற்றும் பக்தர்கள் தமிழில் வழிபட வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் **"அன்னைத் தமிழில் அர்ச்சனை"** செய்யவிருக்கும் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கியப் பதாகையை 03.08.2021 அன்று வெளியிட்டார்.

தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றிப் பாடல் நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2021 அன்று வெளியிட்டார்.

முதற்கட்டமாக, இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 47 முதுநிலை கோயில்களில், அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கியப் பதாகைகள் வைக்கப்பட்டு தமிழில் அர்ச்சனை.

# மக்களைத் தேடி மருத்துவம்



**‘அனைவருக்கும் நலவாழ்வு’** என்ற உயரிய இலக்கை அடைய நோயாளிகளின் இல்லங்களுக்கே சென்று சுகாதாரச் சேவைகள் வழங்கிடும் **“மக்களைத் தேடி மருத்துவம்”** என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

30 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடி மக்களுக்கு சிகிச்சை வழங்க முதற்கட்ட இலக்கு நிருணயிக்கப்பட்டு, இதுவரை 97,34,315 நபர்கள் பயன்.





## மாமன்னன்
# ராஜேந்திர சோழன் பிறந்த நாள்
## அரசு விழா

**மா**மன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த தினத்தை, ஆடி திருவாதிரை விழாவாக அரசு சார்பில் கொண்டாடிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.08.2021 அன்று உத்தரவு.

கங்கை கொண்ட சோழபுரத்தில், மாமன்னன் ராஜேந்திர சோழனால் 1000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தில், ஆண்டுதோறும் ஆடி மாதம் திருவாதிரை நாளன்று கொண்டாடப்படும்.





# காகிதம் இல்லாச் சட்டமன்றம்

காகிதம் இல்லாச் சட்டமன்றம் திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கணினி மயமாக்கும் பணிகள்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கையடக்கத் தொடுதிரைக் கணினி மற்றும் சிம் கார்டுகள்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக 13.08.2021 அன்று காகிதமில்லா நிதிநிலை அறிக்கை.

14.08.2021 அன்று காகிதமில்லா முதலாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கை.



# மகப்பேறு விடுப்பு காலம் நீட்டிப்பு



**பெ**ண் அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொறுப்பின் தொடர்ச்சியாக, திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மகப்பேறு விடுப்பை 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவு.

01.07.2021 முதல் இத்திட்டம் அமல்.









# அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள்

**த**ந்தை பெரியார் அவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ள அனைவரும் சமமாக வழிபட உரிமை வேண்டும், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என விரும்பினார். அவரது விருப்பத்தை நிறைவேற்றிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் **அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்** என்ற அரசாணையினை வெளியிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையிலான அரசு, முறையாகப் பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சென்னை, அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், 14.08.2021 அன்று, இந்துசமய அறநிலையத் திருக்கோயில்களில் பணிபுரிவதற்காக, பயிற்சி பெற்ற 24 அர்ச்சகர்கள் உள்ளிட்ட 208 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.





# தகைசால் தமிழர் விருது

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், **“தகைசால் தமிழர்”** என்ற பெயரில் புதிய விருதினை உருவாக்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆணையிட்டார்.

“தகைசால் தமிழர்” விருதுடன், ரூ.10 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்.

இவ்வாண்டிற்கான விருதினை, தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, 100 வயதைக் கடந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.08.2021 அன்று அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கினார்.





அண்ணல் காந்தியடிகள், தன் வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். 100 ஆண்டுகளுக்கு முன், மதுரைக்கு வந்த மகாத்மா காந்தி மேலாடையைத் துறந்த மகாத்மாவாக மாறினார். அதனை நினைவுகூரும் வகையில், மகாத்மா குறித்த அரியப் பொருட்களைக் கொண்ட மதுரை மகாத்மா காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும், இளைய தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில், ரூ.6 கோடி செலவில் நவீன முறையில் புதுப்பிக்கப்படுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.08.2021 –சுதந்திர தினத்தன்று அறிவித்தார்.

# காந்தி அருங்காட்சியகம்



சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

# 75ஆம் ஆண்டு சுதந்திரத் தின விழா நினைவுத்தூண்






**75**ஆவது சுதந்திரத் தினத்தை நினைவுகூரும் வகையில், சென்னை காமராஜர் சாலை மற்றும் சிவானந்தா சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திரத் தின வைரவிழா நினைவுத்தூணை **15.08.2021** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார்.


தன்னைத் தந்து, இந்தத் தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **24.08.2021** அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

அண்ணா நினைவிட வளாகத்தில் **2.21** ஏக்கர் பரப்பளவில் ரூ.**39** கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம்.



# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மெரினாவில் நினைவிடம்

# கன்னிமரா பொது நூலகம் நவீனமயமாக்கல்



இந்தியாவிலுள்ள பழமையான நூலகங்களில் ஒன்றான சென்னை கன்னிமரா நூலகம் ரூ.3.20 கோடி செலவில் பாரம்பரிய நிலை மாறாத வகையில் மேம்படுத்தப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டது.

- 1896ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொது நூலகம்.
- இந்தியாவின் தேசிய வைப்பு நூலகம்.
- நாடு முழுவதும் வெளியிடப்படும் அனைத்து நாளிதழ், பருவ இதழ்கள் ஒரு பிரதி இலவசமாகப் பெறப்பட்டு வருகிறது.

# கவிமணி விருது



குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்கும்விக்கும் வண்ணம் 18 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் ஆண்டுதோறும் மூன்று எழுத்தாளர்களைத் தேர்வு செய்து “கவிமணி விருது” வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

18 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

ஆண்டுதோறும் மூன்று குழந்தை எழுத்தாளர்களுக்குத் தலா ரூ.25 ஆயிரம் ரொக்கப்பரிசு, கேடயம் மற்றும் சான்றிதழ்.

இளம் எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்ய, பொது நூலக இயக்கக இணை இயக்குநர் அவர்களின் தலைமையில் 9 நபர்களைக் கொண்ட மாநில அளவிலானக் குழு அமைப்பு.



## நவம்பர் 18

# தியாகத் திருநாள்



**செ**க்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், சுதந்திரப் போராட்ட வீரர், வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய நினைவு நாளான நவம்பர் 18 **“தியாகத் திருநாளாகக்”** கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

- வ.உ.சி. அவர்களுடைய 150ஆவது பிறந்த நாள் அரசு விழா.
- சென்னை காந்தி மண்டப வளாகத்தில் மார்பளவு சிலை.
- தூத்துக்குடி, மேலபெரிய காட்டன் சாலை, ‘வ.உ.சிதம்பரனார் சாலை’ எனப் பெயர் மாற்றம்.
- கோயம்புத்தூர், வ.உ.சிதம்பரனார் பூங்காவில் முழு திருவுருவச் சிலை.
- ஒட்டப்பிடாரம், வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லம், திருநெல்வேலி வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் ஒலி–ஒளி காட்சி.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் நவீன டிஜிட்டல் முறையில் திரைப்படம்.
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு.
- திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்கு ரூ.1.05 கோடியில் கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில்.
- கப்பல் தொடர்பான துறைகளில் சிறந்த பங்காற்றிய தமிழர் ஒருவருக்கு ‘கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது’.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நகரும் புகைப்படக் கண்காட்சி.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம்.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் முழுவதும் மின்மயப்படுத்தி இணையத்தில் வெளியிடப்படும்.



# அயோத்திதாசருக்கு மணிமண்டபம்

“மனிதர்களை மனிதர்களாகப் பார்ப்பவர் எவரோ, அவர்தான் மனிதர்” என்று முழங்கிய அயோத்திதாசர்.

அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாக, சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

தமிழன், திராவிடம் என்ற இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர்.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயல்பாட்டாளர், சளைக்காத போராளி எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்.



சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைத் தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கி, கடந்த நூற்றாண்டில் இந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு, எதிர்காலத்துக்குப் பாதை அமைத்துத் தந்த உணர்வை, எழுச்சியை, சிந்தனையை விதைக்கும் அடையாளமாக அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாளை ஆண்டுதோறும் '**சமூக நீதி நாள்**' ஆகக் கொண்டாடுவோம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 06.09.2021 அன்று அறிவித்தார்.

ஆண்டுதோறும், செப்டம்பர் 17ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் சமூக நீதி நாள் உறுதிமொழி.

## உறுதிமொழி

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும் – யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்! சுயமரியாதை ஆளுமைத் திறனும்–பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்! சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்! மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்! சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!"

# செப்டம்பர் 17: சமூக நீதி நாள்



# பத்திரிகையாளர் நல வாரியம்



பத்திரிகையாளர் நலன் கருதி, உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு நலவாரிய உதவித்தொகைகள், நலத்திட்டங்கள் வழங்கும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என **06.09.2021** அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டுச் செயலாக்கம்.





# கலைஞர் எழுதுகோல் விருது



ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்குக் **"கலைஞர் எழுதுகோல் விருது"** வழங்கப்படுமெனச் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

- "கலைஞர் எழுதுகோல் விருது" தேர்வுக் குழு அமைப்பு.
- விண்ணப்பதாரர் தமிழ் இதழியல் துறையில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்.
- இதழியல் துறையில் சமூக, விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பங்காற்றியிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழ்.




சமூகத்தில் சதிகளாலும், சாதிகளாலும் புறக்கணிக்கப்பட்டவர்களை அரவணைத்து, அவர்களின் திறமைகளையும் பங்களிப்புகளையும் வெளிக்கொண்டுவரவும், மாநில அளவில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' தன்னாட்சி அதிகாரத்துடன் உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **08.09.2021** அன்று, சட்டப்பேரவையில் அறிவித்தார்.

# தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்



# ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு அருட்சகோதரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவப் பிரிவினர்களும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்குப் புனிதப் பயணம் செல்வதற்கு ரூ.37 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இப்புனிதப் பயணத்திற்கு அருட்சகோதரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.60 ஆயிரமாக உயர்வு.

தமிழ்நாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில் கூடுதல் சங்கங்கள் துவக்கப்படும்.



# பொருநை அருங்காட்சியகம்










ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு 'பொருநை அருங்காட்சியகம்' அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 09.09.2021 அன்று அறிவித்தார்.

பண்டையத் தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ள அகழ்வாராய்ச்சி மற்றும் ஆழ்கடல் அகழாய்வுக்காக ரூ.5 கோடி.







# மகாகவி நாள்




தேசப்பற்று, தெய்வப்பற்று, தமிழ்ப்பற்று, மானுடப்பற்று ஆகியவற்றுடன் சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியமையால்தான் கவிதை வரிகளாய் உலவி வருகிறார் எட்டயபுரத்துக் கவிஞன் பாரதியார்.

எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி நினைவில்லமாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பெரும்புலவன் மகாகவி பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் வகையில், அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகச் செப்டம்பர் 11ஆம் நாள் ஆண்டுதோறும் மகாகவி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.09.2021 அன்று அறிவித்தார்.




## ஒருகால பூஜைத்திட்ட

# திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.09.2021 அன்று சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒருகாலப் பூஜைத் திட்டத்தின்கீழ் உள்ள 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை தலா ரூ.1,000 வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

9,982 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் பயன்.





## 5 பவுனுக்கு உட்பட்ட

# நகைக்கடன் தள்ளுபடி



கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுன்களுக்கு உட்பட்ட நகைக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், கூட்டுறவு சங்கங்களில் பெற்ற 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்ற 12,19,106 நபர்களுக்கு ரூ.4805.79 கோடி நகைக்கடன் தள்ளுபடி.

# திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்



**தி**ருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளித்து, அவர்களின் பசியினைப் போக்கும் விதமாக, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் அறிவித்து, 16.09.2021 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

பழனி மற்றும் திருவரங்கம் திருக்கோயில்களைத் தொடர்ந்து தற்போது திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- பக்தர்களுக்குக் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை உணவளிக்கப்படுகிறது.
- நாள்தோறும் 15,890 பக்தர்கள் பயன்.



# பனை மேம்பாட்டுத் திட்டம்

**த**மிழ்நாட்டில் பனைமரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள பனைமரங்களைப் பாதுகாப்பதுடன், பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, நடப்பாண்டில் 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளையும், ஒரு இலட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தில் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.09.2021 அன்று, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

- மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு இலட்சம் பனை விதைகளை வழங்கினார்.
- பனை விதைகள், ஏரிக்கரை, சாலையோரம் மற்றும் விவசாய நிலங்களில் நடவு.
- பனை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு.





# 7.5 சதவிகித சிறப்பு உள்ஒதுக்கீடு மாணவர்களின் கல்விக்கான செலவு அரசே ஏற்பு

அழியாத அறிவுச்செல்வம், அனைத்துத் தரப்பு மக்களைச் சென்றடையும் வகையில், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் உயர்கல்வி முறையாகப் பெற்றிடவேண்டும் என்ற நோக்கத்தில், 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீட்டில் தொழிற்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்குமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்து 20.09.2021 அன்று, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைத்தார்.

அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்குப் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில், 7.5 சதவிகித இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய சட்டம்.

நடப்புக் கல்வி ஆண்டில், பொறியியல் படிப்புகளில் 10,000 அரசு பள்ளி மாணாக்கர்களும், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம் மற்றும் சட்டப் படிப்புகளில் 350 அரசு பள்ளி மாணாக்கர்களுக்கும் பயன்பெறுவர்.

# ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டம்





**மா**நிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஒரு வருடத்தில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்குப் புதிய மின்இணைப்புகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **23.09.2021** அன்று, சென்னையில் துவக்கிவைத்தார்.

7 மாதங்களில் இலக்கினை நிறைவேற்றி சாதனை.

**9.65** இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பினை உள்ளடக்கிய ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்.

# தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம்

சென்னை, எழும்பூரில் ரூ.6.47 கோடி செலவில் பாரம்பரியம் மிக்க பழைய காவல் ஆணையரகக் கட்டடமானது தமிழ்நாடு காவல் அருங்காட்சியகமாக மாற்றியமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களால் **28.09.2021** அன்று பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.


தரைத்தளத்தில் காவல்துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், சீருடைகள், வாத்திய இசைக் கருவிகள், காவல்துறையின் சாதனைகள், காவல்துறையால் மீட்டெடுக்கப்பட்ட சிலைகள், கள்ள நோட்டு அச்சடிக்கும் இயந்திரம், வெடிகுண்டுகள், குண்டுகளைக் கண்டெடுக்க உதவும் கருவிகள், மாதிரி சிறைச்சாலையும், முதல் தளத்தில், காவல்துறை துப்பாக்கிகள், வாள்கள், தோட்டாக்கள் ஆகியவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், காவல்துறை பதக்கங்கள், முக்கிய வரலாற்று ஆவணங்கள், அதிமுக்கிய அறிவிப்புகள், ஆங்கிலேயக் காலத்து காவல்துறையினர் பயன்படுத்திய ஆயுதங்கள், தமிழகக் காவல்துறையின் தொடக்கக் காலச் சீருடைகள், பெல்ட், மோப்ப நாய் படைகளின் புகைப்படங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தித் தொகுப்புகள், காவல் ஆணையாளர் அலுவலக அறையில் உள்ள அரிய பழம்பொருட்கள், அணிவகுப்புச் சின்னங்கள், கம்பியில்லாத் தொலைத்தொடர்புக் கருவிகள், காவல்துறை சேவைப் பதக்கங்கள், கலைப்பொருட்கள் ஆகியவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.





# கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **29.09.2021** அன்று, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

நோய்கள் வருமுன் அதனைத் தடுக்கும் அணுகுமுறை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கிடும் வகையில் மீண்டும் புதுப்பொலிவுடன் **"கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்"**. ஆண்டுக்கு **1,250** சிறப்பு முகாம்கள்.

இதுவரை **1,188** முகாம்கள் வாயிலாக **8,25,682** நபர்கள் பயனடைந்தனர்.



# திருக்கோயில்களில் முடி காணிக்கைக்குக் கட்டணமில்லை



இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் பக்தர்களிடம் முடி காணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனவும், அப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கட்டணத்தைத் திருக்கோயில் நிருவாகமே செலுத்தும் என்றும் அறிவித்து நடைமுறைப் படுத்தப்பட்டமையால், தலைமுடி மழிக்கும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மாத ஊக்கத்தொகையாக ரூபாய் 5,000 வழங்கப்படும் என்று அறிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.10.2021 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

- திருக்கோயில்களில் பணிபுரியும் 1,744 முடி திருத்தும் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள்.
- அந்தந்தத் திருக்கோயில்களிலிருந்து மாதந்தோறும் ரூ.5000 ஊக்கத்தொகை.
- ஆண்டொன்றுக்கு ரூ.10.47 கோடி செலவினம்.


அக்டோபர் 5

# தனிப்பெருங்கருணை நாள்

**‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’** என்று பாடிய, கருணை ஒன்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு, பசிப்பிணி நீக்கும் மருத்துவராக வாழ்ந்து காட்டிய அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 5ஆம் நாள் ஆண்டுதோறும் **“தனிப்பெருங்கருணை நாள்”** எனக் கடைப்பிடிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.10.2021 அன்று அறிவித்தார்.

**அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி!**

என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒளி இன்றும் அறியாமையை நீக்கி அன்பை ஊட்டி வருகிறது.



தொல் பழமை நாகரிகப் பாரம்பரியம் உள்ள சில இனங்களில் தமிழினமும் ஒன்று. அப்படிக் கடல் கடந்து, நாடுகள் கடந்து வாழும் வெளிநாடு வாழ் தமிழினத்துக்கு நம்பிக்கை தரும் வகையில் **அயலகத் தமிழர் நல வாரியம்** அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.10.2021 அன்று அறிவித்தார்.

- அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் 13 பேர் கொண்டு "அயலகத் தமிழர் நல வாரியம்".
- மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடி, தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ரூ.3 கோடி.
- ரூ.5 கோடியில் "அயலகத் தமிழர் நல நிதி" உருவாக்கம்.
- அயலகத் தமிழர் குறித்த தரவுத் தளம்.
- கட்டணமில்லாத் தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி.
- நலத்திட்டங்களுக்காக ரூ.8.10 கோடி.
- வெளிநாட்டில் தமிழ்க் கல்வி, கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்காக ரூ.5.50 கோடி.



# அயலகத் தமிழர் நல வாரியம்


# சம்பா பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை

கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து நிலையான தொடர் வருமானம் கிடைத்திடவும், வேளாண்மையில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.10.2021 அன்று சென்னையில், சம்பா பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

- இப்கோ–டோக்கியோ பொது காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.1,089.53 கோடி.
- இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் ரூ.507.65 கோடி.
- 6 இலட்சம் விவசாயிகள் பயன்.

சம்பா பருவப் பயிர்களுக்கான அரசின் பயிர் காப்பீட்டு கட்டண மானியமாகக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு ரூ.1,553.15 கோடி.





# துணிநூல் துறை உருவாக்கம்



**2021–2022**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையினைப் பிரித்து, தனியாகத் துணிநூல் துறை என்ற துறை உருவாக்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.10.2021 அன்று, தலைமைச் செயலகத்தில் துணிநூல் துறை என்ற புதிய துறையினை உருவாக்கித் துவக்கி வைத்தார்.

# கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு







அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம் ஆகிய கைவினைப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு.

புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் தரம், பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் அதன் தொன்மை பேணிப் பாதுகாக்கப்படும்.

புவிசார் குறியீட்டின் மூலம் தமிழகக் கைவினைஞர்களின் படைப்புகள் உலகளவில் கொண்டு சென்று சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பு.

போலியாக உற்பத்தி செய்வதும் கள்ளச்சந்தையில் விற்பதும் கட்டுப்படுத்தப்படும்.



# இல்லம் தேடிக் கல்வி



மாணவர்களின் எதிர்கால நலன் கருதி கொரோனா தொற்றால் 1 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களிடம் கற்றலில் ஏற்பட்ட இழப்பைச் சரி செய்யும் பணியில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக தன்னார்வலர்களின் மூலம் மாணவர்களை அன்றாடக் கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் பங்கேற்கச் செய்யும் வகையில் **இல்லம் தேடிக் கல்வி திட்டத்தை** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.10.2021 அன்று, விழுப்புரம் மாவட்டம், முதலியார் குப்பம் கிராமத்தில் துவக்கிவைத்தார்.

38 மாவட்டங்களில் 1,79,356 தன்னார்வலர்களால், ரூ.199.96 கோடியில் திட்டச் செயலாக்கம்.

30 இலட்சம் மாணவர்கள் பயன்.





# விடுதலைப்போரில் தமிழகம் புகைப்படக் கண்காட்சி




**75** ஆவது சுதந்திரத் திருநாள் அமுதப்பெருவிழா கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக, “விடுதலைப் போரில் தமிழகம்” என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியை 01.11.2021 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தில் திறந்து வைத்தார்.



இக்கண்காட்சியில், இந்திய விடுதலைப் போராட்டத்தின் சீரிய வரலாற்றுத் தொகுப்புகள், தமிழகத் தீரத் தியாகிகளின் குறிப்புகளுடன் புகைப்படங்கள்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் ‘தி இந்து’ பத்திரிகை வெளியிட்ட தியாக மாமணிகளின் அரிய புகைப்படங்கள், சிறப்பு நாணயங்கள், அஞ்சல் தலைகள்.

காந்தியடிகளின் தமிழக நிகழ்ச்சிகள், வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிட்டதைப் பற்றிய பானர்மேனின் அறிக்கை, 1806 வேலூர் கலகம் தொடர்பான அறிக்கை, பாரதியாரின் கருத்துச் சித்திரங்கள், அரசியல் சாசன அமைப்பின் அதிகாரப்பூர்வப் பதிப்பு உட்பட வரலாற்று ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.





# எல்லைப் போராட்டத் தியாகிகளுக்குப் பொற்கிழி



இந்திய நாடு விடுதலைப் பெற்ற பின்பு, 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளை மீண்டும் தமிழகத்தோடு இணைக்க நடைபெற்றப் போராட்டங்களில் பலர் ஈடுபட்டு உயிர் நீத்தும், சிறை சென்றும் தியாகம் செய்துள்ளனர்.


நவம்பர் 1ஆம் நாளை எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளாக அனுசரிக்கும் வகையில், எல்லைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டுச் சிறை சென்று தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லைப் போராட்டத் தியாகிகளுக்குச் சிறப்பு நேர்வாகத் தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான பொற்கிழி மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்து, 01.11.2021 அன்று சென்னையில் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்படுவதன் அடையாளமாக, கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார்.

கொளத்தூர் எவர்வின் மேட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகக் கல்லூரி.

இக்கல்லூரியில் சேரும் அனைத்து மாணவ, மாணவியர்களின் கல்லூரிக் கட்டணம், கல்வி உபகரணங்கள் அனைத்தும் இலவசம்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம் தும்பைப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் ஆகிய இடங்களில் நான்கு பாடப்பிரிவுகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.




# இந்துசமய அறநிலையத்துறை சார்பில்
# கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

# புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய குடியிருப்புகள்





தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியேயும் வசித்துவரும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்து, வேலூர் மாவட்டம், மேல்மொணவூரில் 02.11.2021 அன்று நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

- ரூ.142.16 கோடியில் 3,510 புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல்.
- ரூ.30 கோடியில் 78 முகாம்களில் அடிப்படை வசதி, திட்டப் பணிகளுக்கு அடிக்கல்.
- 58,747 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.12.41 கோடி உயர்த்தப்பட்ட பணக்கொடை.
- 58,677 நபர்களுக்கு ரூ.4.52 கோடியில் இலவச கைத்தறித் துணிமணிகள்.
- ரூ.8.66 கோடியில் மானிய விலையில் 5 எரிவாயு உருளைகள்.
- ரூ.10 கோடியில் 5,000 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் உபகரணங்கள்.
- தொழிற்கல்வி பயிலும் மாணாக்கருக்கு ரூ.3.10 கோடியில் கல்விக் கட்டணம்.
- 940 மாணாக்கர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்வித் உதவித்தொகை ரூ.1.25 கோடி.
- 621 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.6.15 கோடி சமுதாய முதலீட்டு நிதி.
- 106 முகாம்களுக்கு ரூ.5 கோடி வாழ்க்கைத்தர மேம்பாட்டு நிதி.

உட்பட மொத்தம் 225 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள்.



வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 07.11.2021 அன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து போர்க்கால அடிப்படையில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்து, ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார்.



## வெள்ள நிவாரணப் பணிகள்

# களத்தில் முதல்வர்




# நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் இருளர் மற்றும் நரிக்குறவர் இன மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றும் வகையில், முதலமைச்சரின் சிறப்பு வரன்முறை திட்டத்தின்கீழ், வீட்டுமனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 04.11.2021 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், பூஞ்சேரியில் வழங்கினார்.

பூஞ்சேரி கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர் மற்றும் இருளர் இனத்தைச் சார்ந்த 282 நபர்களுக்கு ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டா உட்பட நலத்திட்ட உதவிகள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 443 வீடற்ற இருளர் இனப் பழங்குடியினருக்கு ரூ.19.38 கோடியில் வீடுகள்.





# உயர்தர ரக
# வலிமை சிமெண்ட் திட்டம்




**த**மிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தின்கீழ், ஆலங்குளம் சிமெண்ட் ஆலை ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறனுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970இல் துவக்கப்பட்டது. தொடர்ந்து, அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ.டன் மற்றும் 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட ஆலைகள் நிறுவப்பட்டன.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகம் ‘‘அரசு’’ என்ற பெயரில் சிமெண்டை விற்பனை செய்து வருகிறது.

அதிக உறுதியும், விரைவான உலரும் தன்மையும், அதிக வெப்பத்தையும் தாங்கும் புதிய ரக ‘‘வலிமை’’ சிமெண்ட் அறிமுகப்படுத்தப்படும் என அறிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **16.11.2021** அன்று சென்னையில் உயர்தர ரக சிமெண்ட் ‘‘வலிமை’’யை அறிமுகப்படுத்தி விற்பனையைத் துவக்கி வைத்தார்.





# நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

**வி**வசாயிகளின் நலன் பேணும் வகையில், மானாவாரி நிலத் தொகுப்புகளில் பயன்தரும் மரக்கன்றுகளை வளர்க்கும் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின்கீழ், **"தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்"** என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.11.2021 அன்று சென்னையில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கித் தொடங்கி வைத்தார்.

- ரூ.11.14 கோடி நிதி ஒதுக்கீடு.
- விவசாயிகளுக்கு முதற்கட்டமாக 73 இலட்சம் இலவச மரக்கன்றுகள்.
- ஒரு மரக்கன்றுக்குத் தலா ரூ.7 வீதம் 3 ஆண்டுகளுக்குப் பராமரிப்பு மானியம்.



# முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டம்



முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின்கீழ், அன்றாட தேவைக்கான நஞ்சில்லா காய்கறிகளை மகளிர், தங்களது இல்லங்களிலேயே உற்பத்தி செய்வதற்கும், குழந்தைகள் தாவரங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கும், மானிய விலையில் மாடித் தோட்டத்தளைகள், காய்கறி விதைகள், ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டங்களின் செயலாக்கத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.12.2021 அன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

- ஊரகப் பகுதிகளில் மானியத்தில் 12 வகை காய்கறி விதைகள் அடங்கிய 2 இலட்சம் விதைத் தளைகள்.
- நகர்ப்புறங்களில் மானியத்தில் 6 வகை காய்கறி விதைகள் கொண்ட 1 இலட்சம் மாடித்தோட்ட தளைகள்.
- நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த மானியத்தில் 8 வகை செடிகள் கொண்ட 2 இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள்.
- காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பிலான ஊக்கத்தொகை, இடுபொருட்கள்.

உள்ளிட்ட ரூ.95 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள்.

# திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச திருமணத் திட்டம்



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் மாற்றுத்திறனாளி மணமக்களுக்கு இலவசமாகத் திருமணம் நடத்தும் திட்டத்தினை அறிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.12.2021 அன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.


மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும்.



# நமக்கு நாமே திட்டம்

மக்களின் சுய உதவி, சுயசார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும், பரவலாக்கவும், மக்களுக்குத் தேவையான திட்டங்களை, அவர்களது மூன்றில் ஒரு பங்கு பங்களிப்புடன் பொதுச் சொத்துக்களை உருவாக்கிப் பராமரித்து வரும் '**நமக்கு நாமே திட்டம்**' முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

நமக்கு நாமே திட்டம், ரூ.300 கோடி மதிப்பீட்டில் மீண்டும் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களால் அறிவிக்கப்பட்டு, 11.12.2021 அன்று சேலம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.





# மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி





கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுயசார்புத் தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச்செய்ய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்தியாவிலேயே முதன்முதலாகத் தருமபுரி மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில், 14.12.2021 அன்று 7,56,142 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.2,750 கோடி கடனுதவி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

- 16,519 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கம்.
- 21,598 குழுக்களுக்கு ரூ.32.39 கோடி சுழல் நிதி.
- 37,500 குழுக்களுக்கு ரூ.255.25 கோடி சமுதாய முதலீட்டு நிதி.

# 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள்





வெளிச்சந்தைகளில் மருந்து பொருட்களின் விலைகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் வகையில், ஏழை, எளிய மக்களுக்கு 20 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் மருந்துப் பொருட்களை வழங்கிடும் வகையில், 36 மாவட்டங்களில் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.12.2021 அன்று திறந்து வைத்தார்.

# கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம்

ஆசியாவிலேயே மிகப்பெரிய குளோவர் இலை வடிவமைப்புடன் கூடிய கத்திப்பாரா மேம்பாலத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன், சென்னை மெட்ரோ நிறுவனத்தால் ரூ.14.50 கோடியில் அமைக்கப்பட்ட பூங்கா, சிறார் விளையாடும் இடம் ஆகிய வசதிகளுடன் கூடிய கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.12.2021 அன்று திறந்து வைத்தார்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஒரு மைல் கல்.



# மாநிலப் பாடலாக தமிழ்த்தாய் வாழ்த்து




*“நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!*
*உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!”*

**செ**ம்மொழியாம் தமிழ் மொழியைத் தாயாகப் போற்றும் தமிழர், தம் அன்னையை வாழ்த்திப் பாட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், “இனி தமிழக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் ‘**நீராருங் கடலுடுத்த**’ எனும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய பாடலே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அமையும்” என்று அறிவித்து, **23.11.1970** அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **17.12.2021** அன்று அறிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு துவங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.

பொது நிகழ்வுகளில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாட வேண்டும்.



# "இன்னுயிர்க் காப்போம் நம்மைக் காக்கும் 48" திட்டம்





**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.12.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான நம்மைக் காக்கும் 48 திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.


★ சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு இலவச அவசர மருத்துவச் சிகிச்சை.

★ 609 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைகள் வழங்கிட வழிவகை.

★ 48 மணி நேரத்திற்கு மேலும் தொடர் சிகிச்சை தேவைப்படுவோருக்கு முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தொடர் சிகிச்சை.

இதுவரை விபத்தில் பாதிக்கப்பட்ட 39,542 நபர்களுக்கு ரூ. 34.74 கோடி செலவில் சிகிச்சை.





# இனமான பேராசிரியர் சிலை திறப்பு விழா



"இனமான பேராசிரியர்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெருமிதத்தோடும், பேரறிஞப் பெருந்தகை அண்ணா அவர்களால் "பேராசிரியர் தம்பி" என்று அன்போடும், அழைத்துப் போற்றப்பட்ட பேராசிரியர் க.அன்பழகனார் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளின் தொடக்க நாளான 19.12.2021 அன்று,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார்.

வளாகத்திலுள்ள அலுவலகக் கட்டடத்திற்குப் "பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை" என்று பெயர் சூட்டினார்.




# மீண்டும் மஞ்சப்பை



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.12.2021 அன்று, சென்னையில் நடைபெற்ற விழாவில் "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு இயக்கத்தினைத் தொடங்கிவைத்தார்.

- ஒருமுறை பயன்படுத்தப்பட்டுத் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய சவால்.
- பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள்.
- மக்கும் தன்மையுள்ள இயற்கைக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த அறிவுரை.
- மக்கள் இயக்கம் உருவாக்கம்.

அரசோடு மக்களும் இணைந்து செயல்படும்போது பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் ஒழிக்க முடியும் என்பதில் அரசு உறுதி.

சுற்றுச்சூழலைக் காப்பவரின் அடையாளமே இந்த மஞ்சப்பை.

# பொங்கல் பரிசு சிறப்புத் தொகுப்பு

உலகிற்கே அச்சாணியாகத் திகழும் உழவுத் தொழிலைப் போற்றும் தமிழர்களின் பண்பாட்டுத் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையைத் தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களுக்கும் **மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், நெய், மிளகு, புளி, கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, உளுத்தம்பருப்பு, உப்பு, ரவை, கோதுமை மாவு, வெல்லம், அரிசி, முந்திரிப்பருப்பு, திராட்சை, ஏலக்காய் ஆகிய மளிகைப் பொருட்கள் அடங்கிய துணிப்பையுடன் கூடிய தொகுப்பு மற்றும் முழு கரும்பும் சேர்த்து,** பொங்கல் பரிசு சிறப்புத் தொகுப்பு வழங்கிடும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.01.2022 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

ரூ.1,159 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ், 2,12,17,756 குடும்பங்கள் பயனடைந்தன.





# திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு புத்தாடைகள் மற்றும் சீருடைகள் வழங்கும் திட்டம்

**தி**ருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களையும் திருக்கோயிலுக்கு வருகைபுரியும் பக்தர்கள்எளிதில்அடையாளம்காணும்வகையில்,சீருடைகள் மற்றும் புத்தாடைகள் வழங்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.01.2022 அன்று, சென்னையில் தொடங்கிவைத்தார்.

❖ அர்ச்சகர், பட்டாச்சாரியார், பூசாரிகளுக்கு மயில்கண் பார்டர் பருத்தி வேட்டி.

❖ பெண் பூசாரி மற்றும் திருக்கோயிலில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு அரக்கு நிறத்தில் மஞ்சள் நிற பார்டருடன் கூடிய புடவை.

❖ ஆண் பணியாளர்களுக்குப் பழுப்பு நிறக் கால்சட்டை மற்றும் சந்தன நிற மேற்சட்டைத் துணி.

**36,684** திருக்கோயில்களில் பணிபுரியும் **52,803** பணியாளர்கள் பயன்.



கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், ஒன்றிய அரசு நிருணயிக்கும் விலைக்குமேல் கூடுதலாகத் தமிழ்நாடு அரசு, டன் ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக ரூ.150, கரும்பு உற்பத்தி ஊக்கத் தொகையாக ரூ.42.50 வழங்கப்படும் என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை தனி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கினங்க, அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் பணியினை, தலைமைச் செயலகத்தில் 08.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார்.

34 அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 78.38 இலட்சம் மெ.டன் கரும்பு வழங்கிய தகுதியுடைய 91,120 விவசாயிகளுக்குக் கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.150.89 கோடி.

# கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை





# நெல் தரிசில், பயறு சாகுபடி ஊக்கப்படுத்தும் திட்டம்



நெல் தரிசில் பயறு வகைப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் மண்வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் விவசாயிகளுக்குக் கூடுதலாக இலாபம் கிடைக்கும் வகையில் நெல் தரிசில் பயிர் சாகுபடியை ஊக்கப்படுத்தும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.01.2022 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

11 இலட்சம் ஏக்கர் நெல் தரிசில், உளுந்து மற்றும் பச்சைப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்கள் பயிரிடுவதற்கு இலக்கு.

மானிய விலையில் சான்று விதைகள், உரங்கள் மற்றும் உபகரணங்கள்.

உற்பத்தி செய்யப்படும் பயிர் வகைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாகக் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யத் திட்டம்.

வேளாண்மைப் பொறியியல் துறை
இ-வாடகை

விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்குப் பெற்றுப் பயன்பெற வீட்டிலிருந்தபடியே முன்பதிவு செய்ய இ–வாடகை ஆன்லைன் செயலியை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க. ஸ்டாலின்** அவர்கள் 08.01.2022 அன்று, சென்னையில் தொடங்கி வைத்தார்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் செய்திகள் மற்றும் திட்டங்களை விவசாயிகள் உடனுக்குடன் தெரிந்துகொள்ள வழிவகை.

விவசாயப் பெருமக்கள், தங்களின் சந்தேகங்களை, அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்ய வழிவகை.

# விவசாயிகளுக்கு இ–வாடகை ஆன்லைன் செயலி





# செம்மொழி நூல் வெளியீடு

**செ**ம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித் தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் தொல்காப்பிய ஆய்வு, தெய்வச்சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு, திராவிட ஒப்பீட்டு இலக்கணம்–II, தமிழின் வரலாற்று இலக்கணம் ஆகிய எட்டு புதிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டலின்** அவர்கள் 12.01.2022 அன்று வெளியிட்டார்.



# திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், 13.01.2022 அன்று, சென்னையில் தொடங்கிவைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியம் ரூ.4,000ஆக உயர்வு.

1,804 ஓய்வு பெற்ற கிராமப்புறப் பூசாரிகள் பயன்.

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், மற்றும் அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் ரூ.3,000ஆகவும் உயர்வு.

100 ஓய்வூதியதாரர்கள் பயன்.



# தமிழ்நாட்டில் 7 இடங்களில் அகழாய்வுகள்



தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல்பூர்வமாக நிறுவ தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளும் வகையில் 7 இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.01.2022 அன்று அறிவித்து, 11.02.2022 அன்று, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், மணலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் – மாளிகைமேடு ஆகிய இரு அகழாய்வுப் பணிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

- கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கொந்தகை, அகரம், மணலூர்), சிவகங்கை மாவட்டம் – எட்டாம் கட்டம்.
- சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் – மூன்றாம் கட்டம்
- கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம் – இரண்டாம் கட்டம்
- மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் – இரண்டாம் கட்டம்
- வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – முதல் கட்டம்
- துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – முதல் கட்டம்
- பெரும்பாலை, தருமபுரி மாவட்டம் – முதல் கட்டம்

ரூ.5 கோடி நிதியில் ஏழு தொல்லியல் அகழாய்வுகள், இரண்டு களஆய்வுகள் மற்றும் சங்ககாலக் கொற்கைத் துறைமுகத்தினை அடையாளம் காண முன்களப் புல ஆய்வுப் பணிகள்.



# கலைஞர் மு.கருணாநிதி
# செம்மொழித் தமிழ் விருது




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தம் சொந்த நிதி ஒரு கோடி ரூபாயை வைப்புத் தொகையாக அளித்து, ‘**கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை**’யை 24.07.2008 அன்று நிறுவினார்.

இந்த அறக்கட்டளையின் மூலமாகத் தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள ஆய்வாளருக்கு ஆண்டுதோறும் கலைஞர் மு.கருணாநிதி ‘**செம்மொழித் தமிழ் விருது**’ வழங்கப்பட்டு வருகிறது.

2010 முதல் 2019ஆம் ஆண்டுகள் வரையிலான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.01.2022 அன்று, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் 9 விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

இந்தியாவிலேயே மிக உயரிய வகையில் ரூபாய் 10 இலட்சம் பரிசுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் வெண்கலத்தாலான கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலை.




திருக்குறளை இளைய தலைமுறையினரிடத்தில் கொண்டு சேர்க்கும் வண்ணம், தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் எனச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற, குறளோவியம் என்ற தலைப்பில் மாநில அளவிலான ஓவியப் போட்டியினைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தியது.


* ஏறத்தாழ 12 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்பு.
* சிறப்பான 365 ஓவியங்கள் தெரிவு.
* திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகமாகத் தயாரிப்பு.
* எல்லா ஆண்டுகளிலும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வடிவமைப்பு.

# குறளோவியம்



# ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

**பே**ரிடர் மேலாண்மை, விவசாயம், கட்டுமானக் கண்காணிப்பு, வரி திட்டமிடல், சுகாதாரம், வானவியல், சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்ற அரசுத் துறைகளின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில், சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ரூ.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.01.2022 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தொடங்கி வைத்தார்.





# விடுதலைப் போரில் தமிழகம் அலங்கார ஊர்திகள்


**வி**டுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையிலான “விடுதலைப் போரில் தமிழகம்” என்ற தலைப்பில் சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் பங்கேற்ற, மூன்று அலங்கார ஊர்திகள் தமிழக மக்கள் கண்டு பயனுறும் வகையில் மாநிலம் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டது.

சென்னை, மெரினா கடற்கரையில் 21.02.2022 அன்று காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளைப் பார்வையிட்ட மாணவச் செல்வங்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கலந்துரையாடி, புகைப்படம் எடுத்துக்கொண்டார்.



**நான் முதல்வன்**

உலகை வெல்லும் இளைய தமிழகம்



மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
01.03.2022 அன்று சென்னை,
கலைவாணர் அரங்கத்தில்
நடைபெற்ற நிகழ்ச்சியில்,
ஆண்டுக்குப் பத்து இலட்சம்
இளைஞர்களைப் படிப்பில்,
அறிவில், சிந்தனையில், ஆற்றலில்,
திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு
வழங்கும் ஆற்றல்மிகு திட்டமாம்
**"நான் முதல்வன்"**
திட்டத்தினைத்
தொடங்கி வைத்தார்.

ரூ.3.09 கோடி செலவில்
**"நான் முதல்வன்"** வழிகாட்டல்
இணையதளம்.

# உக்ரைனிலிருந்து தாயகம் திரும்பிய மாணாக்கர் நன்றி



உக்ரைனிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் பாதுகாப்பாகத் தமிழகம் திரும்பிடப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்தமைக்காகவும், **பயணச் செலவுகள்** அனைத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றதற்காகவும், தாயகம் திரும்பிய மருத்துவ மாணவர்கள் தங்கள் படிப்பை இந்தியாவில் தொடர உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தியமைக்காகவும், தாயகம் திரும்பிய மருத்துவ மாணாக்கர்கள் செல்வி நிவேதிதா, செல்வி திவ்யபாரதி, செல்வி ஹரிணி, திரு. நவநீத ஸ்ரீராம் ஆகியோர் திருநெல்வேலி ஜோதிபுரத்தில் **07.03.2022** அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைச் சந்தித்துத் தங்களது நன்றியினைத் தெரிவித்தனர்.



# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் கல்வியை ஊக்குவிக்கவும், திருமண உதவிக்காகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், மாறிவரும் காலச் சூழலுக்கு ஏற்ப, பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர் கல்வியை உறுதி செய்யும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டமாக மாற்றியமைக்கப்படுமென நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை, மாதந்தோறும் 1,000 ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும்.

- ❖ ஆறு இலட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெறுவர்.
- ❖ திட்டச் செயலாக்கத்திற்கு 698 கோடி ரூபாய் ஒதுக்கீடு.





"**தெ**ன்சென்னையில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளன்று அறிவித்து, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக் கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.03.2022 அன்று அடிக்கல் நாட்டினார்.

4.89 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் சுமார் 51,429 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டுமானப்பணிகள்.

## தென் சென்னையில்


# பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை



# துபாயில் முதலீடுகளை ஈர்த்த நம் முதல்வர்

முதலீடுகளை ஈர்க்க முதல் வெளிநாட்டுப் பயணமாகத் துபாய், அபுதாபி ஆகிய நாடுகளுக்குச் சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் முக்கிய தொழில் நிறுவனங்களுடன் ரூ.6,100 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள்.

14,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.






# காவல் உதவி செயலி

**பொ**துமக்கள் குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் காவல்துறையின் உதவியை உடனடியாகப் பெறும் பொருட்டு, 60க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன் இந்திய மாநில காவல்துறையில் உருவாக்கப்பட்டுள்ள செயலிகளில் முதன்மையாக விளங்கும் “காவல் உதவி” செயலியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.04.2022 அன்று, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

**சிறப்பம்சங்கள் :**

- “அவசரம்” உதவி பொத்தான்
- அலைபேசிவழிப் புகார் அளித்தல்
- காவல் நிலைய இருப்பிடம் மற்றும் நேரடி அழைப்பு வசதி
- இணையவழிப் பொருளாதாரக் குற்றம் தொடர்பானப் புகார்கள்
- அவசர கால அறிவிப்புகள் / இதர தகவல்கள் அறியும் வசதி






அவசரகால அலைபேசி அழைப்புக்கு:


Dial 112 100 101 Dial



# அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II

அனைத்துக் குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதிசெய்யும் பொருட்டு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II மீண்டும் அறிமுகம்.

- ஆண்டிற்கு 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்வு. ரூ. 1,200 கோடி ஒதுக்கீடு.
- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அடிப்படை நிதி ரூ. 30 இலட்சம்.
- செயல்திறன் ஊக்கநிதி ரூ. 5 இலட்சம்.
- நிருவாகச் செலவுகளுக்கு 2 விழுக்காடு நிதி.



# புதிய எழுத்தறிவுத் திட்டம்

தமிழ்நாட்டில் 15 வயதிற்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 4.80 இலட்சம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும் வகையில் ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் புதிய எழுத்தறிவுத் திட்டம்.




அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத்தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் “சமத்துவ நாளாக” கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.04.2022 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் அன்று, ஆண்டுதோறும் தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் ‘சமத்துவ நாள் உறுதிமொழி’.

## “சமத்துவ நாள்” உறுதிமொழி

“சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவச் சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்”.




# ஏப்ரல் 14 -சமத்துவ நாள்






# நம் பள்ளி நம் பெருமை

அரசுப் பள்ளிகளைத் தன்னிறைவு பள்ளிகளாக மாற்றும் வகையில், குழந்தைகளுக்குத் தரமானக் கல்வி, சமமானக் கல்வி கிடைத்திடச் செய்யும் வகையில், பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு – "நம் பள்ளி நம் பெருமை" நிகழ்வினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை லேடி வெலிங்டன் மேனிலைப்பள்ளியில் **19.04.2022** அன்று தொடங்கிவைத்தார்.

**37,558** அரசுப் பள்ளிகளில் நடைபெற்ற பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தில் **23** இலட்சம் பெற்றோர்கள் பங்கேற்பு.





# ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம்



தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் உள்ளிட்ட பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக, பல்வேறு விளையாட்டுகளுக்காக உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்த சென்னைக்கு அருகில் பிரம்மாண்டமான விளையாட்டு நகரம் அமைக்கும் பணியைத் தொடர்ந்து,

தமிழக விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு வழிகாட்டும் முயற்சியாக ரூ.**25** கோடி ரூபாய் மதிப்பீட்டில் “ஒலிம்பிக் தங்கம் தேடுதல் என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் **21.04.2022** அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

# உத்தமர் காந்தி விருது



**சி**றப்பாகச் செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு மாவட்டத்திற்கு ஒன்று வீதம், 37 கிராம ஊராட்சிகளுக்குத் தலா ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையுடன் உத்தமர் காந்தி விருது வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.



# கிராமசபைக் கூட்டங்கள்

கிராமப்புற மக்களிடையே திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அரசின் அனைத்துச் செயல்பாடுகளிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1998ஆம் ஆண்டில், ஆண்டுக்கு 4 முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்த உத்தரவிட்டார்.


மக்களின் பங்கேற்பினை உறுதிப்படுத்தும் வகையில் கிராமசபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை 6 ஆக உயர்த்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.04.2022 அன்று அறிவித்தார்.

- ஜனவரி 26 குடியரசு தினம்.
- மே 1 தொழிலாளர் தினம்.
- ஆகஸ்ட் 15 சுதந்திரத் தினம்
- அக்டோபர் 2 காந்தியடிகள் பிறந்த தினம்.

கூடுதலாக...

- மார்ச் 22 உலக தண்ணீர் தினம்.
- நவம்பர் 1 உள்ளாட்சிகள் தினம்.





# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்:

# அரசு விழா



**த**மிழகத்திற்கான அடையாளங்களை உருவாக்கிய, எல்லைகளைத் தாண்டி எல்லோரையும் வசப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் ஜூன் 3, அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 26.04.2022 அன்று அறிவித்தார்.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் அவர்களுக்குக் கலைமிகு முழு திருவுருவச்சிலை நிறுவப்படும்.

# கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது



தமிழ்த் திரை உலகில்
சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில்
'கலைஞர் கலைத்துறை வித்தகர்' விருது
தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும்
ஜூன் 3 அன்று வழங்கப்படும் எனத் தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு.

விருதாளருக்கு ரூ.10 இலட்சம்
மற்றும் நினைவுப் பரிசு.

# மாயூரம் முன்சீப் **வேதநாயகம்** அவர்களுக்கு **அரங்கம்**



**த**மிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என 27.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு.



# பொருளடக்கம்


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்
2. அனைத்து மகளிருக்கும் இலவசப் பயணம்
3. ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு
4. முதல்வரின் முகவரி
5. ஊடகத்துறையினர் முன்களப் பணியாளர்கள்
6. குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவி
7. மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை
8. கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ரா. அவர்களுக்கு திருவுருவச்சிலை
9. ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் பணி நியமனம்
10. மீன்பிடித் தடைக்கால நிவாரணம் உயர்வு
11. கொரோனாவால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு நிவாரணம்
12. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரில் ஆறுதல்
13. ஓய்வுபெற்ற அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகை
14. மதுரையில் கலைஞர் நினைவு நூலகம்
15. இலக்கிய மாமணி விருது
16. கனவு இல்லம்
17. திருவாரூரில் நெல் சேமிப்புக் கிடங்குகள்
18. திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை
19. முன்களப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்
20. காவல்துறையினருக்கு கொரோனா ஊக்கத்தொகை
21. திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவித்தொகை
22. நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி உயர்வு
23. குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம்
24. பெண் காவலர்களுக்கு இலகுவானப் பணி
25. வீட்டிலிருந்தபடியே கல்வி பயில கல்வித் தொலைக்காட்சி
26. முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் கொரோனா நிவாரண நிதி
27. மின்னகம்
28. அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவுடன் புனரமைப்பு
29. சிங்காரச் சென்னை 2.0
30. சென்னை மெட்ரோ இரயில்

# பொருளடக்கம்


31. பொருளாதார ஆலோசனைக் குழு
32. திருக்கோயில் குடமுழுக்கு
33. வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை
34. புதுப்பொலிவுடன் பெரியார் நினைவுச் சமத்துவபுரங்கள்
35. புத்துயிரூட்டப்படும் உழவர் சந்தைகள்
36. புலம்பெயர்ந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப்பொருட்கள் தொகுப்புத் திட்டம்
37. கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்துறை தொய்வின்றி இயங்க நிதியுதவி
38. முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு
39. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் திறப்பு
40. அன்னைத் தமிழில் அர்ச்சனை
41. மக்களைத்தேடி மருத்துவம்
42. மாமன்னன் ராஜேந்திர சோழன் பிறந்த நாள் அரசு விழா
43. காகிதம் இல்லாச் சட்டமன்றம்
44. மகப்பேறு விடுப்புக் காலம் நீட்டிப்பு
45. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள்
46. தகைசால் தமிழர் விருது
47. காந்தி அருங்காட்சியகம்
48. 75ஆம் ஆண்டு சுதந்திரத் தின விழா நினைவுத்தூண்
49. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மெரினாவில் நினைவிடம்
50. கன்னிமாரா பொது நூலகம் நவீனமயமாக்கல்
51. கவிமணி விருது
52. நவம்பர் 18 - தியாகத் திருநாள்
53. அயோத்திதாசருக்கு மணிமண்டபம்
54. செப்டம்பர் 17 - சமூக நீதி நாள்
55. பத்திரிகையாளர் நல வாரியம்
56. கலைஞர் எழுதுகோல் விருது
57. தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்
58. ஜெருசலேம் புனிதப்பயணத்திற்கு அருட்சகோதரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு
59. பொருநை அருங்காட்சியகம்
60. மகாகவி நாள்
61. ஒருகாலப் பூஜைத்திட்ட திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை

# பொருளடக்கம்

62. 5 பவுனுக்கு உட்பட்ட நகைக்கடன் தள்ளுபடி

63. திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

64. பனை மேம்பாட்டுத் திட்டம்

65. 7.5 சதவிகித சிறப்பு உள்ஒதுக்கீடு - மாணவர்களின் கல்விக்கான செலவு அரசே ஏற்பு

66. ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டம்

67. தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம்

68. கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

69. திருக்கோயில்களில் முடி காணிக்கைக்குக் கட்டணமில்லை

70. அக்டோபர் 5 - தனிப்பெருங்கருணை நாள்

71. அயலகத் தமிழர் நல வாரியம்

72. சம்பா பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை

73. துணிநூல் துறை உருவாக்கம்

74. கைவினைப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு

75. இல்லம் தேடிக் கல்வி

76. விடுதலைப்போரில் தமிழகம் புகைப்படக் கண்காட்சி

77. எல்லைப் போராட்டத் தியாகிகளுக்குப் பொற்கிழி

78. இந்து சமய அறிநிலையத்துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

79. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய குடியிருப்புகள்

80. வெள்ள நிவாரணப் பணிகள் களத்தில் முதல்வர்

81. நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

82. உயர்தர ரக வலிமை சிமெண்ட் திட்டம்

83. நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

84. முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டம்

85. திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசத் திருமணத் திட்டம்

86. நமக்கு நாமே திட்டம்

87. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி

88. 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள்

89. கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம்

90. மாநிலப் பாடலாகத் தமிழ்த்தாய் வாழ்த்து

# பொருளடக்கம்


91. ‘‘இன்னுயிர்க் காப்போம் நம்மைக் காக்கும் 48’’ திட்டம்

92. இனமான பேராசிரியர் சிலை திறப்பு விழா

93. மீண்டும் மஞ்சப்பை

94. பொங்கல் பரிசு சிறப்புத் தொகுப்பு

95. திருக்கோயில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் சீருடைகள் வழங்கும் திட்டம்

96. கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை

97. நெல் தரிசல், பயறு சாகுபடி ஊக்கப்படுத்தும் திட்டம்

98. விவசாயிகளுக்கு இ-வாடகை ஆன்லைன் செயலி

99. செம்மொழி நூல் வெளியீடு

100. திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு

101. தமிழ்நாட்டில் 7 இடங்களில் அகழாய்வுகள்

102. கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது

103. குறளோவியம்

104. ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

105. விடுதலைப் போரில் தமிழகம் அலங்கார ஊர்திகள்

106. நான் முதல்வன் திட்டம்

107. உக்ரைனிலிருந்து தாயகம் திரும்பிய மாணாக்கர் நன்றி

108. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

109. தென் சென்னையில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

110. துபாயில் முதலீடுகளை ஈர்த்த நம் முதல்வர்

111. காவல் உதவி செயலி

112. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - II

113. புதிய எழுத்தறிவுத் திட்டம்

114. ஏப்ரல் 14 சமத்துவ நாள்

115. நம் பள்ளி நம் பெருமை

116. ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம்

117. உத்தமர் காந்தி விருது

118. கிராமசபைக் கூட்டங்கள்

119. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் - அரசு விழா

120. கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது

121. மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு அரங்கம்

| | | |
|---|---|---|
| வெளியிடுபவர் மற்றும் © | : | முனைவர் **வீ.ப.ஜெயசீலன்,** இ.ஆ.ப.,<br>இயக்குநர்,<br>செய்தி மக்கள் தொடர்பு மற்றும்<br>அலுவலால் அரசு துணைச் செயலாளர்,<br>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,<br>தலைமைச் செயலகம்,<br>சென்னை – 600 009. |
| ஓவியங்கள் | : | திரு. டிராட்ஸ்கி மருது<br>திரு. க.அசோக் |
| வடிவமைப்பு | : | திரு. இரா.தமிழரசு |
| உருவாக்கம் | : | தமிழரசு அலுவலகம்<br>தரமணி, சென்னை – 600 113 |







“மக்களிடம் செல்; மக்களோடு வாழ் என்று
எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள்
சொன்னதைத் தாரக மந்திரமாக நாங்கள் எங்கள் உள்ளத்தில்
ஏற்றுக் கொண்டு அந்தப் பணியைத் தொடர்ந்து
நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

**தமிழரசு**
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு